www.padippakam.com



**குடாநாட்டில் தமிழ்நாட்டுப் படைகள்**
**மாருதப்பிரவல்லியின் திருமணம் கதிரமலையின் வீழ்ச்சி**

12

# காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை...

தொடர்ந்த வரலாற்று மோசடிகளும் துரோகங்களும்

## வரலாற்றுத் தொடர்

தமிழகத்திலே வைதீக இந்து மதத்தினருக்கும் பௌத்த மதத்தினருக்குமிடையில் ஏற்பட்ட மோதல் அனுராதபுரத்தில் தமிழ் மொழிக்கும், தமிழர் மதத்திற்கும் மகாயான பௌத்தத்திற்கு எதிரான புனிதப்போராக உச்சக்கட்டத்தை அடைந்த போது அக்காலத்தில் மகாயான பௌத்தமும் தமிழர்களின் பூர்வீக மதமும் மேல் நிலையிலிருந்த குடாநாட்டில் அது எத்தகைய பிரதிபலிப்பை ஏற்படுத்தியது என்பதை அறிய முடியவில்லை.

கி.பி. 5 ஆம் நூற்றாண்டில் தாதுசேனனது ஆட்சிக்காலத்தில் மகாயான பௌத்தப் பிரிவின் விகாரைகளை கொள்ளையடித்தமை தீக்கிரையாக்கியமை ஆட்களைக் கடத்திக் கொலை செய்தமை என்று இந்த புனிதப் போர் மதவெறியாக பரிணமித்திருந்த போது அவனது மாமனாரும் தேரவாதப் பிரிவைச் சேர்ந்த பௌத்த பிக்குவுமான 'மகாநாம' வால் எழுதப்பட்ட மகாவம்சத்தில் அதற்கான எந்தக் குறிப்பும் காணப்படவில்லை. மத அடிப்படையில் தமது தேரவாதப் பிரிவு நலனை மட்டும் நோக்கமாகக் கொண்ட மகாநாம குடாநாட்டு அரசையும் அதன் வரலாற்றையும் இருட்டடிப்புச் செய்ததோடு அனுராதபுரவரலாற்றையும் உருகுணை (தென்னிலங்கை) வரலாற்றையும் கூட சிங்களவர்களின் வரலாறாகத் திரித்து விட்டார்.

அவருடைய காலத்தில் மழலைப்பருவத்தில் அரும்பிக் கொண்டிருந்த சிங்கள மொழியையும் தன்னுடைய காலத்திற்கு 1000 வருடங்களுக்கு முன் தோன்றி விட்ட மொழியாகக் காட்ட முற்பட்டார்.

ஆனாலும் அவரது இருட்டடிப்புகளுக்கப்பால் குடா நாட்டைப் பற்றிய செய்திகளும் தென்பகுதியிலும் அனுராதபுரத்திலும் வாழ்ந்த தமிழர்களைப் பற்றி செய்திகளும் இலைமறை காயாக ஆங்காங்கே வெளிப்படவே செய்கின்றன.


### குளக்கோட்டன் வருகை

கி.பி.436 இல் குளக் கோட்டன் என்றும் பாண்டிய மன்னன் திருக்கோணமலையில் அமைந்திருக்கும் கோணேசர் கோயிலை பெருப்பித்துக் காட்டியதோடு அக் கோயிலுக்கு அநேக மானியங்களையும் வழங்கியதாகவும் தம்பலகாமப் பகுதிகளுக்கு நீர் பாய்ச்சும் பொருட்டு கந்தளாயக் குளத்தைக் கட்டியதாகவும் அறியப்படுகின்றது.

பின்னர் தாதுசேனன் காலத்தில் அவனால் ஒதுக்கி வைக்கப்பட்ட அவனது மகனான காசியப்பன் தளபதிகளின் துணையோடு அவனைக் கைது செய்து உயிரோடு அணைக்கட்டு ஒன்றுக்குள் வைத்துக் கட்டிக் கொன்று விட்டு ஆட்சியைக் கைப்பற்றிய போது தாதுசேனனின் மூத்த மகனும் காசியப்பனின் அண்ணனுமான முகிலன் தமிழ் நாட்டுக்குத் தப்பிச் சென்றதாகச் சொல்லப்படுகின்றது.

### தமிழகப் படை

முகிலனது படையெடுப்புக்கு அஞ்சிய காசியப்பன் அனுராதபுரத்தைக் கைவிட்டு சிகிரியாவைத் தலைநகராக்கியதாகவும் - பின்பு பாண்டியர்களின் துணையோடு படையெடுத்து வந்து முகிலன் சிகிரியாவைக் கைப்பற்றி காசியப்பனைக் கொன்றுவிட்டு மீண்டும் அனுராதபுரத்தை தலைநகராக்கியதாகவும் தெரியவருகிறது.



சிங்கநகர் ? (இன்றைய வல்லிபுரம் பகுதி)

முகிலனின் ஆட்சிக்குப் பின் அனுராதபுரத்தில் ஆட்சிக்கு வந்த அக்கிரபோதி என்பவன் கதிரமலையில் ஒரு புத்த விகாரையைக் கட்டியதாக ஒரு குறிப்பு உள்ளது.

இது எந்த அடிப்படையில் கட்டப்பட்டது. அதாவது ஒரு படையெடுப்பின் மூலம் கட்டப்பட்டதா அல்லது கதிரமலை அரசனுடன் செய்துகொண்ட நல்லிணக்க அடிப்படையில் கட்டப்பட்டதா? என்பது தெரியவில்லை. அக்கிரபோதியின் ஆட்சிக்காலம் கி. பி. 564 597 ஆகும்.

### பல்லவப் படை

அதன் பின் சீல மேகவண்ணன் என்ற சிங்கள மன்னன் காலத்தில் கி.பி. 614 - 623 குடாநாட்டின் மீது அனுராதபுரத்திலிருந்து ஒரு படையெடுப்பு நிகழ்ந்ததாக கருதப்படுகிறது. அக்காலத்தில் கதிரமலை அரசனாக இருந்த சிறீ நாகன் என்பவன் தமிழகத்தில் ஆட்சிசெய்த பல்லவ மன்னனான சிங்கவிஷ்ணுவிடம் படை உதவி கோரியதாகவும் - அவனுக்கு உதவ வந்த பல்லவப் படைகள் அனுராதபுர அரசனான சீலமேகவண்ணனைக் கொன்றதோடு அவனது படைகளையும் சிறைப்பிடித்ததாகவும் இந்தச் செய்தி சிங்க விஷ்ணுவால் பொறிக்கப்பட்ட காசாக்குடி (தமிழ்நாடு) சாசனத்தில் இருப்பதாகவும் முதலியார் இராஜநாயகம் குறப்பிடுகிறார்.

மகாவம்ச ஆசிரியர் 'மகாநாம' என்னதான் - நிலப்பிரபுத்துவ மன்னர்களுக்கிடையில் நடைபெற்ற நாடு பிடிக்கும் யுத்தங்களுக்கு இனங்களுக்கிடையான யுத்தம் என்று கதைகட்டியிருந்தாலும் உண்மையில், தமிழ், சிங்கள மக்களுக்குக்கிடையிலான முரண்பாடு ஒன்றும் பெரிதாக இருக்கவில்லை. அக்காலத்தில் இலங்கையில் சிங்களவர்கள் மிகச் சிறுபான்மையினர் என்பதும் அனுராதபுரம் மற்றும் உருகுணை அரசுகளின் ஆட்சியதிகாரத்திற்குட்பட்ட மக்களில் பெரும் பகுதியினர் தமிழர்கள் என்பதும் - சிங்கள மன்னர்களுடைய பட்டத்து ராணிகள், மந்திரிகள் பிரதானிகள், படைத்தளபதிகள் படைவீரர்களில் பெரும்பகுதியினர் - எல்லோருமே தமிழர்களாகவே இருந்து வெட்ட வெளிச்சமான ஒன்றாகும்.

எல்லாச் சிங்கள மன்னர்களுமே தங்களுக்கிடையில் சிம்மாசனப் போட்டி ஏற்பட்ட காலத்தில் எல்லாம் - தமிழக மன்னர்களிடமே படை உதவி கோரியிருப்பதும் குறிப்பிடத் தக்க ஒன்றாகும்.



கந்தரோடை (கதிரமலை)

### கதிரமலைக் காலம்

குடாநாட்டிலிருந்த அரசைப் பொறுத்த வரை கி.பி. எட்டாம் நூற்றாண்டுவரை கதிரமலையே அவர்களது தலைநகராக இருந்திருக்கின்றது. அவர்கள் கடைப்பிடித்த மதம் மகாயான பௌத்த மதமாக இருக்க வேண்டும். அல்லது வைதீக இந்து மதம் அல்லாத பூர்வீக மதத்தை கடைப்பிடிப்பவர்களாக இருந்திருக்க வேண்டும். புதைபொருள் சான்றுகள் கதிரமலை ஒரு பௌத்த இராஜதானி என்று தான் கூறுகின்றன. துர்அதிர்ஸ்ட வசமாக கதிரமலை அரசர்களைப்பற்றிய வரலாற்றுச் சான்றுகள் மிகவும் குறைவாகவே இருப்பதால் அவர்களைப் பற்றி உறுதியாக எதையும் கூற முடியாதுள்ளது. ஆனால் அவர்கள் பௌத்த மத்தத்தைக் கடைப்பிடித்திருந்தாலும் பௌத்தத்தின் ஆதரவாளர்களாக இருந்தாலும் அவர்களது மொழி தமிழ் என்பதாலோ அவர்களது ஆட்சியதிகாரத்திற்கு உட்பட்ட மக்கள் தமிழர்கள்தான் என்பதிலோ மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

கதிரமலை அரசு பற்றிக் காணப்படும் புகைபடர்ந்த இலக்கியச் சான்றுகளுக்கு மத்தியில் தெளிவாகக் காணப்படும் ஒரு குறிப்பு உக்கிரசிங்கன் என்ற மன்னைப் பற்றியதாகும்.

கி.பி 785ல் கதிரமலையிலிருந்து அரசாண்ட இவனை மகாவம்சம் குறிப்பிடும் விஜயனது பரம்பரையில் வந்தவனென்றும். வட இந்தியாவிலிருந்து பெரும் படையுடன் வந்து, விஜயன் காலத்திற்குப் பின் இழந்து போன தங்கள் தலைமுறையின் அரசாட்சியை மீட்டவன் என்றும் யாழ்ப்பாண வைபவ மாலை குறிப்பிடுகிறது.

ஆனால் உண்மையில் இவன் யாழ்ப்பாண குடாநாட்டு சமூக அமைப்பிலிருந்து தோற்றம் பெற்ற தமிழ் மன்னன் என்றே கருத வேண்டும். வைபவமாலை சொல்கிற படி இவனை விஜயனின் வாரிசு என்று ஒத்துக் கொண்டால், குடா நாட்டில் தமிழர்கள் வசிக்கவில்லை என்ற மகாவம்சப் பரம்பரையினரின் பொய்யுரையை ஏற்பதாக ஆகும். விஜயன் வருகையை முற்றாக நிராகரிக்காத முதலியார் இராஜநாயகம் அவர்கள் கூட உக்கிர சிங்கனை விஜயனது வாரிசு என்பதையிட்டு சந்தேகமே தெரிவித்துள்ளார்.

### மாருதப்பிரவல்லி வருகை

இந்த உக்கிரசேனன் காலத்தில் சோழ நாட்டை ஆண்ட திசையுக்கிர சோழன் என்பவனின் மகளான மாருதப்பிரவல்லி தனக்குண்டான நோய் ஒன்று நீங்கும் பொருட்டு தலயாத்திரை மேற்கொண்டு கீரிமலைக்கு வந்தபோது, அங்கே அவளைக் கண்டு காதல் கொண்ட உக்கிரசிங்கன், அவளை மணம் முடிக்க விரும்பினான் என்றும், அவள் கீரிமலைக்கு அண்மையிலுள்ள மாவிட்டபுரத்தில் தங்கியிருந்து முருகக் கடவுளுக்கு ஆலயம் ஒன்றை அமைக்கும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது ஒரு நாள் இரவு உக்கிரசேனை படைகளுடன் வந்து அவளைக் கடத்திக் கொண்டு சென்று திருமணம் செய்து கொண்டதாக வைபவ மாலை குறிப்பிடுகின்றது.

இந்தத் திருணமத்திற்குப் பின் கதிரமலை பற்றிய செய்திகள் அநேகமாக மறைக்கப்பட்டு விடுகின்றன. முதலியார் இராஜநாயகம் அவர்கள் புத்த பள்ளிகள் நிறைந்த கதிரமலையில் தொடர்ந்து இருக்க உக்கிரசிங்கன் கடற்கரைப்பட்டணமான சிங்க நகரை தலை நகராக்கினான் என்று குறிப்பிடுகின்றார்.

இந்தச் சிங்க நகர் எது என்பதில் கூட தமிழ் வரலாற்று அறிஞர்களிடையே குழப்பங்கள் உள்ளது.

1. பொ. இரகுபதி
2. முதலியார். செ.இராஜநாயகம் யாழ்ப்பாணச் சரித்திரம்
3. முதலியார் குல.சபாநாதன் யாழ்ப்பாண வைபவ மாலை.

**- நக்கீரன்**